T/200/0472

உ

சிவமயம்

வேதவன விநாயகன் துணை



"வேதவனத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

# ஔவையார்

# பாடல் திரட்டு

தொகுப்பு:

டாக்டர் சு. சி. அருளானந்தம்

05-05-95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வேதவன விநாயகன் துணை



"வேதவனத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

# ஔவையார்

# பாடல் திரட்டு

தொகுப்பு:

டாக்டர் சு. சி. அருளானந்தம்.

05-05-95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*AUWAI PAADAL THIRADDU*

(A collection of poems of the
great poetess Auwaiar)

Published by: *Dr. S.S. Arulanantham*
Sangathanai.
Chavakachcheri.

First Edition: May, 1995

Printers: Thirukkanitha Nilayam
Madduvil North,
Chavakachcheri.

Rs 100/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

என்னை இப்புவிக்கு ஈந்த என் பிறந்த சொந்த மண்ணாகிய மந்துவிலை தன்னகத்தே கொண்ட ஈழவள திருநாட்டிற்கும்,

என்னைப் பெற்றெடுத்து வளர்த்த என் மாதா—பிதாவிற்கும்,

என்னைக் கல்வியூட்டி உயர்வடையச் செய்த சாவகச்சேரி இந்துவிற்கும்,

என் இருகரமும் கூப்பி சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன்.

டாக்டர் சு. சி. அருளானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணம்;

## சமர்ப்பணம்.

என்னைப் பெற்று வளர்த்து ஆகக் குறைந்தது ஒரு பயிற்றப்பட்ட மருத்துவ னாக்க வேண்டும் என்று கனவு கண்டு அதற்காக உழைத்து அக்கனவை நன வாகக் காணுமுன்பே இவ்வுலக வாழ்வை நீத்து தன் கண்களை மூடிக்கொண்ட என் அருமைத்தாயார், மந்துவில் ஊர் தில்லையம் பலம் அவர்கள் மகளும், மந்துவில் ஆசிரியர் சுந்தரம் சின்னத்தம்பி பெண்ணுமான

**அன்னம்மா அவர்கட்கு**

இந்த (எனது) முயற்சியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

டாக்டர் சு. அருளானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

முப்பது ஆண்டுகள் அரச சேவையிலிருந்து பின் இளைப்பாறி செஞ்சிலுவைச் சங்க தொண்டிலும், தொழிலிலும் ஈடுபட்டிருந்த வேளையில் யாழ் செஞ்சிலுவைச் சங்க நிர்வாக உறுப்பினரும் பிரதிக் கல்விப்பணிப்பாளருமான உயர்திரு வேலாயுதம் அவர்களின் தேனுக்கினிய ஒளவையார் பாடற் பிரயோகம் என்மனதைக் கவர்ந்து சிந்திக்க வைத்தது.

யான் மாணவனாக இருந்தபொழுது படித்துப் பாடமாக்கிய சில பாடல்களின் பெருமையையும், நல்வாழ்விற்கு அவைதரும் அறிவையும் காலந்தாழ்த்தியர்வது இறக்குமுன் அறிந்தேனே என்று மகிழ்ச்சியுற்று திரும்பவும் அவற்றை படிக்க முனைந்தபோது ஒளவையார் பாடல்கள் ஒரு திரட்டாக இல்லாமல் தனித்தனி பல சிறு நூல்களாகவும், இன்னும் பல கிடைப்பதே அரிதாகவுமுள்ளதை உணர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்களைத் தேடி அறிய முற்பட்டபோது ஔவையார் ஒருவர் அல்லர் மூவர் என்றும் எனவே மூவரது நூல்களையும் பெற்றுக்கொள்ளுதல் கடினமென்றும், அவை காலத்தால் சிதறுண்டு போயுள்ளன என்றும் பலர் எனக்கு எடுத்துரைத்தனர். ஆனால் என்னைப்பொறுத்தவரை ஔவையார் மூவரோ அல்லது அதிகமானின் நெல்லிக் கனியை உண்டு சிரஞ்சீவியாக மூன்று தமிழ்ச் சங்கத்திலும் ஒருவராகவே இருந்தாரா என்பது முக்கியமல்ல. அவரின் பெயரால் விளங்கி அரும்பெரும் பொக்கிஷங்களாக மிளிரும் பாடல்கள்தான் முக்கியம்.

பிரமாதமான ஔவையார் பாடல்கள் கருத்தாழமும், பகுத்தறியும் தன்மையும் இலகுவாக விளங்கி யாராலும் கையாளப்படக்கூடியனவும் ஆகும். எனவேதான் எதிர்கால சந்ததிக்கும் இவை கிடைக்கப்பெற வேண்டும் எனும் நோக்கில் என் கைக்குக் கிடைத்த ஔவை பாடல்களைத் தொகுத்து நூல்வடிவமாக்க முயன்றிருக்கிறேன்.

பல நூலகங்களிலும் தேடி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, வெற்றிவேற்கை, நன்னெறி, உலகநீதி, மூதுரை, ஔவை தனிப் பாடல்கள், ஔவை குறள், திருவருட்பால், தன் பால், கல்வி ஒழுக்கம் ஆகியவற்றை இந்நூலில் தொகுத்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ்மாலை, ஞானக்குறள், பந்தனந்தாதி என்னும் ஒளவையார் பாடல்கள் என்வசம் கிடைக்கவில்லை. யாரிடமாவது இருப்பின் மறுபதிப்பில் சேர்த்துக்கொள்ள உதவி புரியுமாறு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

இறுதியாக எனது இந்த முயற்சிக்குத் துணை நின்று நூல்களை தேடிப்பெற்றுத்தந்த நண்பர்களுக்கும், மற்றும் பல்வகையிலும் உதவி நல்கிய அன்பர்களுக்கும், அச்சு வேலையை ஒப்பேற்றித் தந்த அச்சகத்தினர்க்கும் மனமார்ந்த நன்றிகளை இயம்பி உங்கள் அனைவரினதும் ஆக்கபூர்வமான ஆதரவையும் வேண்டி அமைகிறேன்.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'

வாழ்க தமிழ்

டாக்டர் சு. சி. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் சந்த

# ஆத்திசூடி மந்திரம்

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி
ஐய மிட்டுண்
ஒப்புர வொழுகு
ஓதுவ தொழியேல்
ஔவியம் பேசேல்
அஃகஞ் சுருக்கேல்
கண்டொன்று சொல்லேல்
ஙப்போல் வளை
சனி நீராடு
ஞயம்பட வுரை
இடம்பட வீடெடேல்
இணக்கமறிந் திணங்கு
தந்தைதாய் பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர்செய்
மன்றுபறித் துண்ணேல்
இயல்பலாதன செயேல்
அரவ மாட்டேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவம் பஞ்சிற்றுயில்
வஞ்சகம் பேசேல்
அழகலாதன செயேல்
இளமையிற் கல்
அறனை மறவேல்
அனந்த லாடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் படவாழ்
கீழ்மை யகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்ப தொழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட் டொழி
கௌவை யகற்று
சக்கர நெறிநில்
சான்றோ ரினத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச்செய்
சேரிட மறிந்துசேர்
சையெனத் திரியேல்
சொற்சோர்வு படேல்
சோம்பித் திரியேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கோ னெனத்திரி
தானமது விரும்பு
திருமாலுக் கடிமைசெய்
தீவினை யகற்று
துன்பத்திற் கிடங்கொடேல்
தூக்கி வினைசெய்
தெய்வ மிகழேல்
தேசத்தோ டொத்துவாழ்
தையல்சொற் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடொப்பன செய்
நிலையிற் பிரியேல்
நீர்விளை யாடேல்
நுண்மை நுகரேல்
நூல்பல கல்
நெற்பயிர் விளை
நேர்பட வொழுகு
நைவினை நணுகேல்
நொய்ய உரையேல்
நோய்க்கிடங் கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடு பெறநில்
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
பூமி திருத்தியுண்
பெரியோரைத் துணைக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதைமை அகற்று
பையலோ டிணங்கேல்
பொருள்தனைப் போற்றிவாழ்
போர்த்தொழில் புரியேல்
மனந்தடு மாறேல்
மாற்றானுக் கிடங்கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோ டிணங்கேல்
மெல்லினில்லாள் தோள்சேர்
மேன்மக்கள் சொற்கேள்
மொழிவ தறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாதுமுற் கூறேல்
வித்தை விரும்பு
வீடுபெற நில்
உத்தமயிரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினைசெயேல்
வைகறைத் துயிலெழு
ஒன்னாரைத் தேறல்
ஓரம் சொல்லேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

## காப்பு

கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோம் யாமே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று
இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருக்குதல் பெண்டிர்க் கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப் பற்றி யோரகத்திரு
ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசு தலாக்கத்திற் கழிவு
அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
காவல் தானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோர் ஆயினுந் தாழ வுரை
குற்றம் - பார்க்கிற் சுற்றமில்லை
கூரம்பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டில் உறுதி கூட்டுமுடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவ னறித லுற்றிடத் துதவி
கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு
கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை
சான்றோ ரென்கை ஈன்றோட் கழகு
சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு
சீரைத் தேடி னேரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவ மறந்தால் கைதவ மாளும்
சேமம் புகினும் யாமத் துறங்கு
சையொத் திருந்தா லைய மிட்டுண்
சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தை சொன்மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
திரைகட லோடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
தெய்வம் சீறிற் கைதவ மாளும்
தேடா தழிக்கிற் பாடா முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது
தோழ னோடு மேழைமை பேசேல்
நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
நீரகம் பொருந்திய வூரகத் திரு
நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரா நோன்பு சீராகாது
நைபவ ரெனினு நொய்ய வுரையேல்
நொய்யவ ரென்பவர் வெய்ய வராவர்
நோன்பென் பதுவே கொன்றுதின் னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்
பாலோ டாயினுங் கால மறிந்துண்
பிறன்மனை புகாமை யறமெனத் தகும்
பீரம் பேணி பாரந் தாங்கும்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்
பூரியர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லைச் சுற்றமுஞ் சினமும்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்
போனக மென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி யல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாமன் இல்லா மரக்கல மோடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்
மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வங் கோழை படாது
மொழிவது மறுக்கி னழிவது கருமம்
மோன மென்பது ஞான வரம்பு
வளவ னாயினும் அளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோ ரென்கை யிரவா திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறி னுந்துணை யில்லை
வையந் தோறும் தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்
ஓதாதார்க் கில்லை யுணர்வோ டொழுக்கம்

# நல்வழி

தீதினை நீக்கு, நன்மையைச் செய்
இரண்டே சாதி
விரைந்து தருமம் செய்க
குருடன் எறிந்த மாத்திரைக்கோல்
மாந்தர் தொழில்
பிறர்க்கா வருவதன்று
தாமரையிலைத் தண்ணீர்
செல்வம் உருண்டோடும்
இல்லை என்றுரையா இதயத்தர்
இட்டுண்டிரும்
பாழ்வயிறே! உன்னுடன் வாழ்தல் அரிது
உழு தொழிலே உலகில் உயர் தொழில்
விதி வலிது
மானமிழந்தும் வாழ்வதோ?
விதியினை வெல்லும் மதி
நாத்பெரும் அற்புதங்கள்
தெய்வத்தை நொந்து பயனென்?
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிறு படுத்தும் பாடு
பரத்தை தொடர்பாற் பாழாவீர்
வஞ்சமிலார் வாழ்வர்
பாவி புதைத்த பணம்
பட்சபாதம் விளைவிக்கும் கேடு
இவையெலாம் பாழ்
வரவிற்கேற்பச் செலவு செய்க
பசிக்குமுன் யாவும் பறக்கும்
எல்லாம் இறைவன் செயல்
ஆசைக்கோர் அளவு வேண்டும்
கரவாது அளித்திடுக
வினை மிக வலிது
ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று
உள்ள மேன்மையே உயர்ந்த செல்வம்
பாரையும் பசுமரமும்
இல்லானை எவர் விரும்புவர்?
குறிப்பிற் பொருள் உணர்வோர்
விதி என்செயும்?
சமநிலைத் தத்துவம்
ஒரு வாசகம் பற்றிய பெருவாசகம்
நல்வழியைப் போதிக்கும் நல்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிவேற்கை

குருஎனும் இறைவன்
அழகு எது?
செல்வர்க்கு அழகு
அந்தணர்க்கு எது அழகு?
மாநிலங் காவலன்
வணிகச் செல்வர்
உழவர்தம் உயர்வு
மந்திரி எவன்?
தந்திரியின் தறுசஞ்ஞண்மை
விருந்தோடு உண்க
பெண்டிர்க்கு அழகு எது?
குலமகள் கடமை
அறிஞர்க்கழகு அடக்கம்
வறுமையிற் செம்மை
உருவுகண்டு அஞ்சற்க
சிறிதும் பெரும்பயன் தரும்
பெருமையும் சிறுமையும்
நன்மக்கள் எவர்?
உற்றுழி உதவாதவர் உறவினரோ?
மனை மாண்பு
உத்தமர் பண்பு
இழிந்தோர் இயல்பு
செய்யும் செய்கையே பயனுக்குவித்து
தீமையைப் பொறுத்தல் சான்றோர் கடன்
சிறியோரின் பெரும்பிழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்க்கரின் நட்பு
பெரியோர் நட்பு
கல்வியின் மாண்பு
கற்றிலன் குலப்பிறப்புப் பயனற்றது
கற்றோர்க்கு எங்கும் சிறப்பு
அறிவுடைமை
கொச்சை மாக்கள்
கையிருந்து என்ன பயன்?
சாதுக்கள் யாவரும் சன்மார்க்க ரல்லர்
பற்றற்றவன் ஞானி
கறையான்போல் வாழ்க
அறிவற்றோர் அஞ்சார்
துன்புற்றோர்க்கு எவையும் ஒன்றே
ஏழைக்கு உறவில்லை
நிலையாமை
மாறிடும், ஏறிடும்
வாழ்வும், தாழ்வும்
வீழ்ந்தோர் எழுவர்
குன்றமும் குப்பைமேடாகும்
மாடம் மண்மேடாகும்
அழிவிலிருந்து ஆக்கம்
அழியும் இவ்வணி உடல்
இரப்பது இயல்பு
கொடுத்தல் கடன்
இல்லாளே எல்லாம்
ஆண்மை எது?
புலியும் புல்வாயும்
அஞ்சுவது அஞ்சல்
கொடுங்கோல் மன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர் இல்லாத நாடு
அந்தணரிற் பதர்
வேந்தனிற் பதர்
வணிகரிற் பதர்
உழவரிற் பதர்
மனைவியை மறந்தவன்
பேதை
என்சொல் கேண்மின்
பொய்யும் மெய்யும்
மெய்யும் பொய்யாகும்
வாயாலே சொல்லற்க
சுழியில் இறங்கேல்
வழித்துணை
புணையின் துணை
ஏகும் வழி
இவை உலகியல்
வாழி

# நன்னெறி

## காப்பு

மின்னெறி சடாமுடி விநாயகன் அடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

உயர்ந்தோரின் அறம்
பயன்தரு சொல் எது?
கன்று கொண்டு ஆவிலே கறந்திடுக
உலோபிகள் செல்வம் பிறர்க்கே உரியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கிப்பின் சேரல் அரிது
இல்லறம் எது?
கல்வியாற் செருக்கடையேல்
சினங் காக்க
ஈசன்முடியுறையும் பாம்பு
விழுமியோர் மாண்பு
புல்லியரும் மெய்ஞ்ஞானிகளும்
வியத்தகு செயல்
வளத்திற்கேற்ப வழங்குவர்
மேருமலையும் வளைந்தது
அன்பிலான் பெற்றபேறு
உயர்ந்தோர் பண்பு
குலநலம் மாறாது
இன்சொல்லும் வன்சொல்லும்
தென்றலும் சூறுவளியும்
தம்நோய்போல் பிறர்நோய் காணல்
அறிஞர்முன் அறிவிலார் நிலை
அறிவில் உயர்ந்தது அகிலத்தில் இல்லை
எறும்பூரக் கற்குழியும்
கீழ்மக்கள்
கூடாநட்பு
மேலோரும் கீழோரும்
இடுக்கண்கண்டு நகைப்போர்
கூற்றங் குறுகமுன் செய்க அறம்
மெய்யுங் கையும்
அறநூல் உணர்ச்சி அறிவிலார்க் கில்லை
கடலும் குளமும்
பழிக்கு நாணுவார்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியோர் கொடைச்சிறப்பு
தன்னைப்புகழும் தற்குறி
உயர்நட்பும் இழிநட்பும்
மூடரின் கேண்மை
கல்வியின் மாட்சி

# உலகநீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப்புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல்இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
சினம்தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்
வனம்தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம்
கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
மற்றுநிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

வாழாமல் பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்
மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்லவேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரில் புறம்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாரும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்த்தபுகழாளன் ஒரு வள்ளி பங்கன்
திருக்கை வேலாயுதனைச் செப்பாய் நெஞ்சே.

கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கு அழிவை ஒருநாளும் பேசவேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொதுநிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனம்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே.

சேராத இடம்தனிலே சேரவேண்டாம்
செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடும் குண்டுணியாய்த் திரியவேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்
வாராரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்நின்று மண்ஓரம் சொல்ல சொல்லவேண்டாம்
மனம்சலித்துச் சிலுக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண்அழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணுத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறசொல்லித் திரிவாரோடு இணங்கவேண்டாம்
மண் அளந்தான் தங்கைஉமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

மறம் பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்ருரை நத்த வேண்டாம்
குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூருய் நெஞ்சே.

அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அது ஏது இங்கு என்னில்நீ சொல்லக்கேளாய்
தஞ்சமுடன் வண்ணுன் நாவிதன் தன்கூலி
சகல கலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சு அறுத்த மருத்துவச்சி கூலி
மகாநோவு தனைத்தீர்த்த மருத்துவன் கூலி
இன் சொல்லுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானே ஏமன்ருனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூருக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூருக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வீருன தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்
மாருன குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

ஆதரித்துப் பலவகையால் பொருளும் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப்பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடி வைத்த உலகநீதி
காதலித்துக் கற்ருேரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினேடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந்தேடிப்
பூலோகம் உள்ள அளவும் வாழ்வார் தாமே.

# மூதுரை

### காப்பு

வாக்கு உண்டாம் நல்லமனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
'என்று தருங்கொல்?' எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

இன்ஞு இளமை வறுமைவந்து எய்தியக்கால்
இன்ஞு அளவில் இனியவும்—இன்ஞத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக்கு அழகு.

அட்டாலும் பால்சுவையில் குன்ருது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லர்—நண்பு அல்லார்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

அடுத்து முயன்ருலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ?-கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்; தான்கற்ற
நூல்அளவே ஆகுமாம் நுண் அறிவு—மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே-நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

தீயாரைக் காண்பதுவும் தீதே; திருஅற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமிபோனால் முளையாதாம் —கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கு ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

மடல்பெரிது தாழை; மகிழ்இனிது கந்தம்
உடல்சிறியர் என்று இருக்கவேண்டா —கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டுஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டா தவன்நன் மரம்.

கான மயில்ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல்-பாங்கு
[அறியா
புல்அறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓடஉறுமீன் வரும்அளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும்?-சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும்-என்
[ஆகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன்.

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க [வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

இல்லாள் அகத்துஇருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறாய் விடும்.

எழுதியவாறே காண்; இரங்கும் மடநெஞ்சே!
கருதியவாறு ஆமோ கருமம்?—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் [ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை

கல்பிளவோடு ஒப்பர் கயவர்; கடுஞ்சினத்துப்
பொன்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே—வில்
நீர்கிழிய எய்தவடுப்போல மாறுமே [பிடித்து
சீர்ஒழுகு சான்றோர் சினம்.

நல்தாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற் [போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சுஉடைமை தான்அறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறம்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்-மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்புஇல்லை கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு.

கல்லாத மாந்தர்க்கு கற்றுஉணர்ந்தார் சொல் [கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம்கூற்றம் — மெல்லிய
வாழைக்கு தான்ஈன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்துஒழுகாப் பெண்.

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது; ஆதலால் — தம்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று?

மருவுஇனிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் — திருமடந்தை
ஆம்போது அவளோடு ஆகும்; அவள் பிரிந்து
போம்போது அவளோடும் போம்.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் — மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார்

## (தனிப்பாடல் திரட்டு)

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ —முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

மதுர மொழிநல் லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினையவல் லார்க்(கு)அரி தோமுகில் போல் [முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரு(ம்) அதன்பின் [சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

(சோழன் ஔவையை எந்த ஊரென்று கேட்டதற்குப் பாடியது)

கால்நொந்தேன் நொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூரம் எளிதன்று —கூனல்
கருந்தேனுக்(கு) அண்ணாந்த காவிரிசூழ் நாடா!
இருந்தேனுக்(கு) எங்கே இடம்.

(சோழன் ஔவையென்றறியாமற் கம்பர் பாட்டை வியந்த போது பாடியது)

விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும் அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சோழன் கம்பர்போலப் பெருநூல் பாடுவோர் ஒருவரு மில்லை என்றபோது பாடியது)

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் —யாம் [பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்
எல்லார்க்கும் ஒவ்வொன்(று) எளிது [காண்

சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

(சோழன் கம்பனை யார் வெல்வார் என்றபோது பாடியது)

காணமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணமல் வாய்திறக்கக் கூடாதே—நாணமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி.

(சோழன் பொருளை எவ்வாறு செலவிடலாமென்றதற் குப் பாடியது)

நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் —வம்புக் [காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண் [காம்

(ஒரு குறவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தார்கள். அவர்களுள் குறவனுக்கு இளையாள் பேரில் மோகம், ஒருநாள் அவன் "ஒருக்குப் போய்வருகிறேன்" நான் அன்பாக வளர்க் கும் பலாவை நீங்களிருவரும் பார்த்துக் கொள்ளுங்க"



3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளென்று சொல்லிப் போயினன். இளையாள் அம்மரத்தை வெட்டிவிட்டு மூத்தாள்மேற் பழி சுமத்தினுள். குற்றமற்ற வளாகிய மூத்தாள் கணவன் என்ன செய்வானோவென்று வருந்திக்கொண்டிருந்தாள். ஔவையார் அவளை வினவி அஞ்சாதே என்று பலாத்தழைக்கப் பாடியது)

கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்ருய் உயர்மரமாய்ச் –சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்
பண்டுபோல் நிற்கப் பணி. [பழமாய்ப்

(ஔவை கையிலிருந்த மூட்டையை என்னவென்று சோழன் கேட்டதற்குப் பாடியது)

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள் –சோழாகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்.

(கொடியவளை மனையாளாகப் பெற்றவன் அவளுக்குத் தொண்டு செய்து ஔவைக்கு உணவிட வேண்டும் என்று கூற அவள் அவனைத் தாக்கினுள்: அப்பொழுது பாடியது.

இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்பவ—ருந்திமிக
ஆடினுள் பாடினுள் ஆடிப் பழமுறத்தால்
சாடினுள் ஓடோடத் தான்.

(கணவன் மிகவும் வேண்டிக் கொள்ள அவள் சோறிட்ட போது பாடியது)

கார்ணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாமுேக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பில்லாள் இட்ட அமுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஔவையார் நான்முகனை இகழ்ந்து பாடியது)

அற்றதலை போக அறாததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ —வற்றும்
மரமனை யானுக்கிங் மானை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்.

(மனைவாழ்க்கையை விட எண்ணியபோது ஔவையார் அவனுக்குச் சொன்ன அறிவு)

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலுங் கூடி இருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்.

(இதுவும் அது)

சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே [தொண்டா!
செருப்படிதான் செல்லாஉன் செல்வமென்ன செல் [வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

(சிலம்பி என்னுந் தாசி 500 பொன் கொடுக்கக் கம்பர் பாடிய பாதிப்பாட்டை ஔவை நிறைவாகக் கூழுக்குப் பாடியது)

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே"-பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதைக் கண்டு கம்பர் பொறுமையால் ஔவையை அடி யென்று சொல்ல விரும்பி, "ஒருகாலடி நாலிலைப் பந்தல்"டி என்று இலேடையாகச் சொல்லிப் பொருள் கேட்டபோது பாடியது)

எட்டேகா லட்சணமே! ஏமனே றும்பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!—முட்டமேற்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னாய் அடா.

(திருக்கோவலூரில் பெண்ணை நதிக்குத் தென்கரையில் குடிசை போட்டுக் கொண்டிருந்த பாரி யென்னும் இடையன் வீட்டிற்கு ஔவை மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டு போயினள். அவ்வீட்டிலிருந்த அங்கவை, சங்கவை என்னும் பெண்கள் தங்கள் கறுப்புச் சிற்றுடையைக் கொடுத்ததன்றிப் பிறகு குளிர்காயச் செய்து முருங்கைக் கீரையை நெய்விட்டுச் சமைத்துக் கேழவரகு களிக் கிளறிச் சாப்பிடச் செய்தனர் ஔவையார் அதை வியந்து பாடியது)

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகஞ் செறிந்த கையார்.

(நீலச் சிற்றுடையை வியந்து பாடியது)

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும்—சேரமான்
வாராய் எனஅழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்.

(அங்கவை, சங்கவை யென்னும் பெண்களைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் மணஞ்செய்து கொடுக்க எண்ணி மண வோலை எழுத விநாயகரை வரும்படி பாடியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்
கரியுரிவைக் கங்காளன் காளாய்! —பரிவுடனே
கண்ணுலை ஓலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

(சோழனை மணத்நுக்கு வரும்படி பாடியது)

புகார்மன்னன் பொன்னிப் புனல்நாடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—தகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்.

(பாண்டியனை மணத்துக்கு வரும்படி பாடியது)

வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவீ ரொன்பானுள்
ஈண்டு வருக இசைந்து.

(சேரனை வரும்படி பாடியது)

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசர் மனமிசைந்தார்
சங்கவையை யுங்கூடத் தான்.

(வருணனைப் பொன்மாரி பெய்யப் பாடியது)

கருணையால் இந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே! மாமலையன் கோவல் திருமணத்தில்
முன்மாரி பெய்யு முதுமாரி யைமாற்றிப்
பொன்மாரி ஆகப் பொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பெண்ணை நதியைப் பால் நெய்யாகிப் பெருகி வரும்படி பாடியது)

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா.

(திருக்கோவலூரைச் சிறப்பித்துப் பாடியது)

பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர்.

(பனந்துண்டந் தளிர்க்கப் பாடியது)

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டி
[யனும்
மங்கைக்கு அறுகிட வந்துநின் றூர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச்சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்
[டமே!

(அங்கவை, சங்கவை யென்னும் பெண்களுக்கு இடையர் மரபின்படி சீதனங் கொடுக்கச் சேரனை ஆடு கேட்டனர். அவன் பொன் ஆடு கொடுத்தான். அதைச் சிறப்பித்துப் பாடியது)

சிரப்பான் மணிமௌலிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடி யான்கேட்கப் பொன்னாடொன் றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தங்கொடையின் சீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சோழனையும் பாண்டியனையும் வாழ்த்திப் பெண்களை எப்போதும் அன்பாகப் பாதுகாக்கும்படி பாடியது)

ஆயன் பதியில் அரன்பதிவந் துற்றளகம்
மாயன்உல துங்கருவி ஆனாலும்— தூயமணிக்
குன்றுபோல் வீறு குணமுடையார் தம்முடனீர்
இன்றுபோல் என்றும் இரும்.

சொல்லாமலேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய்! கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

இலக்கணக் கவிஞர்சொல் இன்பந் தேடுவர்
மலக்குசொல் தேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நீளும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்

நிட்டூர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா இரவலனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

(சோழன் ஒரு சேலையைப் பார்த்துக்கொண்டு ஔவையார் பாடலைக் கருத்துடன் கேட்காமலிருந்தான். அப்போது பாடியது)

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும்-மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா!
என்றும் கிழியாதென் பாட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேலூர்ப் பூதன் விருந்திட்டதைப் புகழ்ந்து பாடியது)

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோ(று)
எல்லா உலகும் பெறும்.

(இதனினுமிது நன்றெனல்)

ஏசி யிடலில் இடாமையே நன்(று) எதிரில்
பேசு மனையாளில் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தில் நன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

கோரைக்காலில் இருக்கும் ஆழ்வான் கொடையை இகழ்ந்து பாடியது)

கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானாய்
எருதாய் முழப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகால் ஓய்ந்ததே
கோரைக்கால் ஆழ்வான் கொடை.

(ஈகையில்லானைக் குறித்துப் பாடியது)

பாடல் பெறுனே பலர்மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்கள் நாடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்.

(முல்லரின் என்பவனைப் புகழ்ந்து பாடியது)

காலையில்ஒன் றுவர் கடும்பகலில் ஒன்றுவர்
மாலையில்ஒன் றுவர் மனிதரெல்லாம்—சாலவே
முல்லானைப் போல முகமுகமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஒரு புலவன் கையில் மண்ணை வைத்துக்கொண்டு இஃதென்னவென்று கேட்டதற்குப் பாடியது)

கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் – மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்!
எறும்புந்தன் கையாலெண் சாண்.

(அரசன் அமைச்சராக யாரை வைக்கலாமென்று கேட்டதற்குப் பாடியது)

நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ ஆங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு.

செம்மான் மகளைத் திருடும் திருடனருள் சேயா! நெடியோனை
அம்மான் எனப்பெற் றருள்வேலா!—இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்கும் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்குங் கூந்தல் அணை.

(ஒவ்வொன்று கோடி பெறுமென்று பாடியது)

மதியாதார் முற்றம் மதித்தொருக்காற் சென்று
மிதியாமை கோடி பெறும்.

உண்ணீர்உண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.

கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடையநாக்
கோடாமை கோடி பெறும்.

வாதக்கோன் நாளையென்றான் மற்றைக்கோன்
[பின்னையென்றான்
ஏதக்கோன் யாதேனும் இல்லையென்றான்-ஓதக்கேள்
வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன் சொல்
ஏதக்கோன் சொல்லே இனிது. [லதிலும்

சுற்றுங் கருங்குளவி சூரைத்தூறு ஆரியப்பேய்
எற்றுஞ் சுடுகாடு இடிகரையின் -- புற்றின்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்தேன் ஒக்கும்
தளர்ந்தோர்க்கொன்(று) ஈயார் தனம்.

(பொற்கிழி அறும்படி பாடியன)

ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்
[புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே! தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு.

தண்டாமல் ஈவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி பின்சென்றும்
ஈயானெச் சம்போல் அறு.

உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமறும் என்றால் அறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன் — வழக்கிழந்
[தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறும் என்றால் அறு

(ஓர் அரசன் மகள் ஓர் அரசிளங் குமரனைக் கல்வியறி வில்லாதவனென்றறியாமல், ஓர் அறச்சாலையில் இன்ன காலத்தில் நீ வந்திருந்தால் நான் வருகிறேன்' என்றெழுதி னள். அதை அவன் கல்வியறிவுள்ள ஒருவனுக்குக் காண் பித்தனன். அவன் அதன் கருத்தையறிந்து அரசிளங்குமாரனை 'நீ யிவ்விடத்திருந்தால் அரசன் உன் தலையை வெட்டுவா னென்று அவனைப் போகச்செய்து, தான் அக்காலத்தில் அந்த அரசிளங்குமாரனைப் போலக் கோலங்கொண்டு அங்கிருந் தனன். அரசன் மகள் அவ்வாறே வந்து பிறன் என்று அறி யாமற் கூடிய பின்பு தெரிந்து தற்கொலை செய்துகொண்டு இறந்து வருகிறார்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தாள்; அவ்வறச்சாலைக்கு ஔவையார் ஒருநாள் வந்தனர். அவரை யுஞ் சாமந்தோறும் துன்பஞ் செய்யத் தொடங்கியபோது நான்கு சாமத்திலும் பாடியன)

வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப் — பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

கருங்குளவி சூரைத்தூ(று)ஈச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன்(று) ஈயாதான் வாழ்க்கை-அரும்
[பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதால் தயையுளதால் — ஆனபொழு(து)
எய்த்தோம் இளைத்தோம் என்(று)ஏமாந் திருப்
எற்றோமற் றெற்றோமற் றெற்று. [பாரை

எண்ணு யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றாக் கிடையேபோல்-பெண்ணுவாய்
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாராரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

(மாடு மேய்க்கும் சிறுவனைப்போல வந்த முருகக் கடவு ளிடத்தில் ஔவையார் தோல்வி யடைந்தபொழுது பாடியது)

கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக் நாணும் — பெருங்கானில்
காரெருமை மேய்கின்ற காளைக்கு நான்தோற்ற(து)
ஈரிரவு துஞ்சா(து) என்கண்.

(முருகர் கொடியது முதலியன கேட்க ஔவையார் பாடிய ஆசிரியப்பா)

(கொடியது)

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடியது
இன்புற அவர் கையில் உண்பது தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இனியது)

இனியது கேட்கில் தனிநெடு வேலாய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளாரைக்
கனவிலும் நனவிலுங் காண்பது தானே.

(பெரியது)

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

(அரியது)

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்தல் அரிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமுங் கல்வியும் நயந்த காலேயும்
தானமுந் தவமுந் தான்செயல் அரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

(விஞ்ஞானவகைகளைக் குறித்துப் பாடியது)

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிப நல்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதுங்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டிர்
விருந்தில்லான் வீடும் விழல்.

(பாராட்டுப்பெறத் தகியவர்கள் பாராட்டப்பெற வேண்டிய இடங்கள்)

நேசனைக்கா ணுவிடத்து நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை எவ்விடத்தும் அப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்.

ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்கல் ஆமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ.

(சோமனென்னும் செல்வன்மேற் பாடியது)

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
அழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டில் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாவாணர்களுக்கு அருமையானவைகளைப் பற்றி பாடியது)
காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
பேசுமுலா விற்பெறுங் பைபுலி—ஆசு
வலவர்க்கு வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் பெண்பாப் புலி.

(அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் செய்யுளிற் பாடியது)
ஈதல்அறத் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றுங்
காதல் இருவர் கருத் தொருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம் பரனை நினைத் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

தாயோடு அறுசுவைபோந் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்வு
உற்றார் உடன்போம் உடற்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்.

போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி அருந்துரும்பாம் இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

(நன்னிலத்துப் பெருங்கோயில் இறைவனைப் பாடியது)
மேற்பார்க்க மைந்தரும் மூவா எருதும் விளங்குகங்கை
நீர்ப்பாய்ச்சலு நன்னிலமுமுண் டாகியுநின்னிடத்தில்
பாற்பாக் கியவதி நீங்காதிருந்தும் பலிக்குழன்றீர்
ஏற்பார்க் கிடாமலன்றோ பெருங் கோயில் இறைவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைப் புகழ்ந்து பாடவேண்டும் என்ற சிலரின் தன்மை குறித்துப் பாடியது)

அகவல்

மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய என்றன் பனுவல் வாயால்
என்னையும் பாடுக என்றனிர் எங்ஙனம்
பாடுது மியாங் களிறுபடு செங்களம்
கண்ணிற் காணீர் வெளிறுபடு நல்வாழ்
விருப்பமாய்க் கேளீர்
இலவ வாய்ச்சியர் இளமுலை புல்லீர்
புலவர் வாய்ச்சொற் புலர்பலுக் கிரங்கலீர்
ஊட்டீர் உண்ணீர் கோட்டீர் கொள்ளீர்
ஓவாக் கானத் துயர்மரம் போலத்
தாவாக் கனியில் தோன்றி னீரே.

கல்வி யுடையீர்! கருங்கான கத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு.

(பாண்டியன் திருமணத்தில் விருந்துண்டது)

வண்டமிழைத் தேர்ந்த வழுதிகலி யாணத்(து)
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள் — அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்.

(நாட்டு வளங்களைப் பாடியது)

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப் —பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்
நன்னாடு சான்றோ ருடைத்து. [றொண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்வு
இல்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்.

(வருங்காலத்தில் எதுவும் வலியவரும். போங்காலத்தில் தானே போகும் என்று பாடியது)

ஆங்காலம் மெய்வருந்த வேண்டாம தேதென்னில்
தேங்காய்க் கிளநீர்போற் சேருமே—போங்காலம்
காட்டானை உண்ட கனியதுபோல் காணுமே
நாட்டாளன் தேடும் தனம்.

(ஈயாத புல்லரைச் சினந்து பாடியது)

இறுக முடிந்தே இரப்பார்க்கொன்(று) ஈயாத்
தறுகணரைக் கொல்லத் தகாதோ —சிறுகை
வடுகனையும் பேதை வரதனையுங் கொன்றாய்
நடுவாமோ இந் நமனே.

(கைக்குறி காட்டி ஔவையார் கேட்ட கேள்விக்குச் சங்கப் புலவர்கள் கூறிய விடையை மறுத்துப் பாடியது)

ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வள வேனும்அன்னம் இட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே என்ன உணரவல் லீரேல்
அருவினைகள் ஐந்தும் அறும்.

(கல்வி நிலைமையைக் குறித்துப் பாடியன)

எழுபிறவி யோதி உணர்ந்தார் தமக்கே
வருபிறவி தோறும் வலிதே—இருந்தீர்
கலைவாணர் எல்லாங் கழறினர்காண் நெஞ்சில்
மலைவாகக் கொள்ளேல் மதித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதரிது முன்னம் எழுதிய பின்னரப்
பழுதறவா சிப்பரிது பண்பாய்—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தான்அந் நிலை.

(திருக்குறளை வியந்து கூறியது)

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(நெல்லிக்கனி கொடுத்ததைச் சிறப்பித்து அதிகமானைப் பாடியது)

பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை ஆற்றினையும்—ஈங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றை நாவை
அறுப்பித்தாய் ஆமலகம் தந்து.

(ஏழிற்கோவைச் சினந்து பாடியது)

இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே!
குருடேயும் அன்றுநின் குற்றம்—மருடீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனஇரண்டு
ஓட்டைச் செவியும் உள.

ஔவையார் ஒருவனைப் புகழ்ந்து பாடினார்: பாட்டருமை தெரியாத அப்புல்லன் ஔவையாரை இகழ்ந்தான். அப் போது ஔவையார் சினந்து பாடிய அங்கதம்)

எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
எம்மிக ழாதவர் தம்மிக ழாரே
தம்புகழ் இகழ்வோர் எம்புகழ் இகழ்வோர்
பாரி ஓரி நள்ளி எழினி
ஆஅய் பேகன் பெருந்தோள் மலையனென்(று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவருள் ஒருவனும் அல்லை யதனால்
நின்னை நோவ தெவனோ
அட்டார்க் குதவாக் கட்டி போல
நீயும் உளையே நின்னன் னோர்க்கே
டானும் உளனே தீம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் தேளத்துப்
பருகுபால் அன்னவென் சொல்லுக்குத் தேனே.

(பந்தன் என்னும் வணிகனைப் பாடியது)

யானவ்வை யென்றிரந் தேத்தினேன் மற்றவனும்
ஏனவ்வை யேயென் றிரங்கினான்—நானுங்கேள்
மன்னும் புகார்வணிகன் மாநகரன் பந்தனெனும்
பொன்னனருள் பெற்றேனிப் போது.

(சேரமானைப் பிரிந்தபின் பாடியது)

சிறுக்கீரை வெவ்விடகும் சேதாவின் நெய்யும்
மறுப்படாத் தண்டயிரும் மாந்தி—வெறுத்தேனை
வஞ்சிக்குங் கொற்கைக்கும் மன்னவனேற் பித்
[தானே
அஞ்சிக்கும் புற்கைக்குங் கை.

(புராந்தகச் சோழன்மீது பாடியது)

கோலெடுத்துக் கோத்துரத்துங் கோகனகச் செங்
[கைவடி
வேலெடுத்துங் கோத்துரத்தல் விட்டிலனே-சீலமிகு
பூபாலர் ஆனாலும் போமோ புராந்தகற்குக்
கோபாலர் ஆன குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திருக்குடந்தையில் கொடையாளனைப் புகழ்ந்தும் பிறனை இகழ்ந்தும் பாடியது)

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்றும்
உலகில் விரும்விருந்தோ டுண்டு.

(உழவுக்குரிய நன்மைகளை உரைத்தது)

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரஎளிதாய்ச் செய்வாருஞ் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது.

(தத்துவங் கூறியது)

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்மன்தன் வீரமே வீரமாற்(று)—ஒன்றானும்
சாகாமற் கற்பதே வித்தை தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

(கைப்பொருளின் பெருமையைக் கூறியது)

உடையராய்ச் சென்றக்கால் ஊரெல்லாஞ் சுற்றம்
முடவராய்க் கோலூன்றிச் சென்றக்கால் சுற்றம்
உடையானும் வேறு படும்.

சோழமன்னன் மனிதர்கட்கு எது எது பற்றி அழகுண்டாகும் என்று கேட்டபோது பாடியது)

சுரதந் தனில்இளைத்த தோகை சுகிர்தம்
விரதந் தனில்இளைத்த மேனி—நிரதம்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரில் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுழு துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுழு துண்பான் மனைவாழ்க்கை—முன்றலில்
துச்சில் இருந்து துடைத்தெழுகண் நீராலேழ்
எச்சம் இறுமேல் இறு.

(யாதவர்களைப் புகழ்ந்து பாடியது)

மெய்வந்த கோவலர் தங்குலத்
தாரை வெறுங்குலத்தோர்
கைவந் தனஞ்சொலின் வாய்வெந்
திடும்அந்தக் காரணங்கேள்
ஐவந்த வேள்வியில் ஐவர்க்குந்
தெய்வமும் ஆகிநின்ற
தெய்வம் பிறந்த குலங்காணும்
நந்தன் திருக்குலமே.

[ஐவேலி அசதியின்மீது பாடிய கோவையில் கிடைத்த சில செய்யுட்கள்]

ஆடுங் கடைமணி ஐவேல் அசதி அணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி னுள்தந்த ஆசை நிகழ்த்தரிதால்
கோடுங் குளமும் குளத்தரு கேநிற்குங் குன்றுகளுங்
காடுஞ் செடியும் அவளாகத் தோன்றும்என் கண்
[களுக்கே.

அற்றாரைத் தாங்கிய ஐவேல்
அசதி அணிவரைமேல்
முற்கு முகிழ்முலை எவ்வாறு
சென்றனள் முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவுங்கல் லாதார்
இளமையும் கைப்பொருளொன்(று)
அற்றார் இளமையும் போலே
கொதிக்கும் அருஞ்சுரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சஞ் சலங்கொண்ட ஐவேல்
அசதி அகல்வரையின்
இருஞ்சஞ் சலஞ்சொல்ல வேண்டுங்
கொலோஎன தன்னைமொழி
தருஞ்சஞ் சலமுந் தனிவைத்துப்
போனவர் சஞ்சலமும்
பெருஞ்சஞ் சலங்கொண்டு யானிருந்
தேனொரு பெண்பிறந்தே.

அலைகொண்ட வேற்கரத் தைவேல்
அசதி அணிவரைமேல்
நிலைகொண்ட மங்கைதன் கொங்கைக்குத்
தோற்றிள நீரினங்கள்
குலையுண் டிடியுண்டென் கையினில்
எற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண் டடியுண்டு கண்ணீர்
ததும்பவும் வெட்டுண்டவே.

அழக்கட்டுக் கட்டிய ஐவேல் அசதி அணிவரையின்
மழைக்கட்டுக் கட்டிய மாளிகை மேல்ஒரு மங்கை
[நல்லாள்
உழுகுட் டுரியிட்டு முவ்வுழக் கிட்டுரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துடன் அங்கன் நன் றேமயிர் கோதி
[னளே.

அறங்காட் டியகரத் தைவேல்
அசதி அகன் சிலம்பில்
திறங்காட்டுங் கஞ்சத் திருவனை
யீர்முகம் நீண்டகுமிழ்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறங்காட்டும் வேலுஞ் சிலையுங்கொல்
யானையுந் தேருங்கொண்டு
புறங்காட் டவுந்திரு மோசிலைக்
காமன்தன் பூசலிலே.

ஆலவட் டப்பிறை ஐவேல் அசதி அணிவரைமேல்
நீலவட்ட டக்கண்கள் நேரொக்கும் போதந்த நேரி
[ழையாள்
மாலைவிட் டுச்சுற்றி வட்டமிட் டோடி வரவழைத்து
வேலைவிட் டுக்குத்தி வெட்டுவ ளாகில் விலக்கரிதே.

ஆரா யிரங்கொண்ட ஐவேல்
அசதி அகன்கிரியில்
நீராடப் போகும் நெறிதனி
லேயந்தி நேரத்திலே
சீரான குங்குமக் கொங்கையைக்
காட்டிச் சிரித்தொருபெண்
போராள் பிடிபிடி என்றே
நிலாவும் புறப்பட்டதே.

ஆய்ப்பாடி ஆயர்தம் ஐவேல்
அசதி அணிவரையில்
கோப்பாம் இவள்எழிற் கொங்கைக்குத்
தோற்றிபக் கோடிரண்டும்
சீப்பாய்ச் சிணுக்கரி யாய்ச்சிமி
ழாய்ச்சின்ன மோதிரமாய்க்
காப்பாய்ச் சதுரங்க மாய்பல்லக்
காகிக் கடைப்பட்டவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவை குறள்

## வீட்டுநெறிப்பால்

### 1. பிறப்பினிலைமை

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்.

பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
தரமாறிற் றோன்றும் பிறப்பு.

ஓசை பரிச முருவஞ் சுவைநாற்றம்
ஆசை படுத்து மளறு.

தருமம் பொருள் காமம் வீடென நான்கும்
உருவத்தா லாய பயன்.

நிலமைந்து நீநான்கு நீடங்கி மூன்றே
உலவை யிரண்டொன்று விண்.

மாயன் பிரம னுருத்திரன் மகேசனோ
டாயுஞ் சிவமூர்த்தி யைந்து.

மாலய னங்கி யிரவி மதியுமையோ
டேழுந் திகழ்சத்தி யாறு.

தொக்குதிரத் தோடூன் மூளை நிணமென்பு
சுக்கிலந் தாதுக ளேழு.

மண்ணொடுநீ ரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு.

இவையெல்லாங் கூடி யுடம்பாய வொன்றி
னவையெல்லா மானது விந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உடம்பின்பயன்

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்.

உணர்வாவ தெல்லா முடம்பின் பயனே
யுணர்க வுணர்வுடை யார்.

ஒருபய னாவ துடம்பின் பயனே
தருபயனாஞ் சங்கரனைச் சார்.

பிறப்பினாற் பெற்ற பயனாவ தெல்லாந்
துறப்பதாந் தூநெறிக்கட் சென்று

உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை
யுடம்பினா லுன்னியதே யாம்.

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு.

ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்
நேசத்தா லாய வுடம்பு.

உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி யாதியை நாடு.

உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு.

அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும்.

## 3. உள்ளுடம்பினிலைமை

கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலாம்
உற்றுடம்பா லாய வுணர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிபொன் மேனிய தொக்கும் வினையுடைய
உள்ளுடம்பி னுய வொளி.

சென்றுண்டு வந்து திரிதரு முள்ளுடம்
பென்றுங் கெடாத திது.

வருபய லுண்டு மகிழ்துட னு நிற்கும்
ஒருபயனைக் காட்டு முடம்பு.

அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய
தொல்லை யுடம்பின் றொடர்பு.

நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு.

உள்ளுடப் பின் வாழ்வன வொன்பது மேழைக்
கட்ளவுடம் பாகி விடும்.

பொய்க்கெல்லாம் பாசனமா யுள்ளதற்கோர் வித்
[தாகு
மெய்க்குள்ளா மாய வுடம்பு.

வாயுவினு லாய வுடம்பின் பயனே
ஆயுவி னெல்லை யது.

ஒன்பது வாசலு மொக்க வடைத்தால்
அன்பதி லொன்று மரன்.

## 4. நாடிதாரணை

எழுபத்தி ராயிர நாடி யவற்றுள்
முழுபத்து நாடி முதல்.

நரம்பெனு நாடி யிவையினுக் கெல்லாம்
உரம்பெறு நாடியொன் றுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தி முதலா யுருமுடிகீழ் மேலாய்ப்
பந்தித்து நிற்கும் பரிந்து.

காலொடு கையி னடுயிடைத் தாமரை
நூல்போலு நாடி நுழைந்து.

ஆதித்தன் றன்கதிர் போலவந் நாடிகள்
பேதித்துத் தாய்பரந்த வாறு.

மெய்யெல்லா மாகி நரம்போ டெலும்பிலைசந்து
பொய்யில்லை நாடிப்புணர்வு.

உந்தி முதலாகி யோங்காரத் துட்பொருளாய்
நின்றது நாடி நிலை.

நாடிக ளூடுபோய்ப் புக்க நலஞ்சுடர்தான்
வீடு தருமாம் விரைந்து.

நாடி வழக்க மறிந்து செறிந்தடங்கி
நீடொளி காண்ப தறிவு.

அறிந்தடங்கி நிற்குமந் நாடிக டோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம்.

## 5. வாயுதாரணை

மூலத்தி னிற்றோன்றி முடிவிலிரு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் காண்.

இடைபிங் கலைக ளிரேசக மாற்றில்
அடையு மரணு ரருள்.

அங்குலியால் மூடி முறையா விரேசிக்கில்
பொங்குமாம் பூரகத்தி னுள்.

எண்ணிலி யூழி யுடம்பா யிரேசிக்கில்
உண்ணிலைமை பெற்ற துணர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிர்க்கால் வழியெல்லா மாய்கின்ற வாயு
உயிர்ப்பின்றி யுள்ளே பதி.

இரேசிப் பதுபோலப் பூரித்து நிற்கில்
தராசுமூனே நாக்கதுவே யாம்.

கும்பகத்தி னுள்ளே குறித்தரனைத் தாளுக்கில்
தும்பிபோ னிற்குந் தொடர்ந்து.

இரேசக பூரக கும்பக மாற்றில்
தராசுபோ னிற்குந் தலை.

வாயுவழக்க மறிந்து செறிந்தடங்கில்
ஆயுட் பெருக்க முண்டாம்.

போகின்ற வாயு பொருந்திற் சிவமொக்கும்
தாழ்கின்ற வாயு வடக்கு.

## 6. அங்கிதாரணை

அந்தத்தி லங்கி யழல்போலத் தாளுக்கில்
பந்தப் பிறப்பறுக்க லாம்.

உள்ளும் புறம்பு மொருங்கக் கொழுவூறில்
கள்ளமல மறுக்க லாம.

எரியுந் தழல்போல வுள்ளுற நோக்கில்
கரியுங் கனலுருவ மாம்.

உள்ளங்கி தன்னை யொருங்கக் கொர்மூவூறில்
வெள்ளங்கி தானும் விரைந்து.

உந்தியி னுள்ளே யொருங்கச் சுடர்பாய்ச்சில்
அந்தி யழலுருவ மாம்.

ஐயைந்து மாய வகத்து ளெரிநோக்கில்
பொய்யைந்தும் போகும் புறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது மொன்று மழல்போலத் தானேக்கில்
உம்ப ரொளியாய் விடும்.

தூண்டுஞ் சுடரைத் துளங்காமற் றூனேக்கில்
வேண்டுங் குறைமுடிக்க லாம்.

உள்ளத்தா லங்கி யொருங்கக் கொழுவூறில்
மெள்ளத்தான் வீடாம் விரைந்து.

ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில்
வெள்ளியா மாலை விளக்கு.

## 7. அமுததாரணை

அண்ணாக்குத் தன்னை யடைத்தங் கமிர்துண்ணில்
விண்ணோர்க்கு வேந்தனு மாம்.

ஈரெண் கலையி னிறைந்த வமிர்துண்ணில்
பூரண மாகும் பொலிந்து.

ஓங்காரமான கலசத் தமிர்துண்ணில்
போங்கால மில்லை புரிந்து.

ஆன கலசத் தமிர்தை யறிந்துண்ணில்
போனகம் வேண்டாற் போம்.

ஊறு மமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக்க லாம்.

ஞானவொளி விளக்கா னல்ல வமிர்துண்ணில்
ஆனசிவ யோகி யாம்.

மேலை யமிர்தை விளங்காமற் றூனுண்ணில்
காலனை வஞ்சிக்க லாம்.

காலனை யாக்கக் கலந்த வமிர்துண்ணில்
ஞான மதுவா நயந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையி லின்னமிர்த முண்டாங் கினிதிருக்கில்
தொல்லை முதலொளியே யாம்.

நிலாமண் டபத்தி னிறைந்த வமிர்துண்ணில்
உலாவலா மந்தரத்தின் மேல்.

## 8. அர்ச்சனை

மண்டலங்கண் மூன்று மருவ வுடனிருத்தி
அண்டரனை யர்ச்சிக்குமாறு.

ஆசனத்தைக் கட்டி யரன்றன்னை யர்ச்சித்துப்
பூசனைசெய் துள்ளே புணர்.

உள்ளமே பீடமுணர்வே சிவலிங்கந்
தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு.

ஆதாரத் துள்ளே யறிந்து சிவனுருவைப்
பேதமற வர்ச்சிக்கு மாறு.

பூரித் திருந்து புணர்ந்து சிவனுருவைப்
பாரித்தங் கர்ச்சிக்கு மாறு.

விளக்குறு சிந்தையரன் மெய்பொருளைக் கண்டு
துளக்கற வர்ச்சிக்கு மாறு.

பிண்டத்தி னுள்ளே பேரா திறைவனைக்
கண்டுதா னர்ச்சிக்கு மாறு.

மந்திரங்க ளெல்லா மயங்காம லுண்ணினைந்
தாரா தனைசெய்யு மாறு.

உள்ளத்தி னுள்ளே யுறப்பார்த்தங் கொண்டசுடரை
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. உள்ளுணர்தல்

எண்ணிலி யூழி தயஞ்செய்திங் கிசைனை
உண்ணிலைமை பெற்ற துணர்வு.

பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்து
நல்லுணர்வு பெற்ற நலம்.

எண்ணற் கரிய வருந்தவத்தா லன்றே
நண்ணப் படுமுணர்வு தான்.

முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்
பின்னைப் பெருமுணர்வு தான்.

காயக் கிலேச முணர்ந்த பயனன்றே
ஓயா வுணர்வு பெறல்.

பண்டைப் பிறவிப் பயனாந் தவத்தினால்
கண்டங் குணர்வு பெறல்.

பேராத் தவத்தின் பயனும் பிறப்பின்மை
ஆராந் துணர்வு பெறின்.

ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய வுணர்வு.

ஆதியோ டொன்று மறிவைப் பெறுவதுதான்
நீதியாற் செய்த தவம்.

காடு மலையுங் கருதித் தவஞ்செய்தால்
கூடு முணர்வின் பயன்.

## 10. பத்தியுடைமை

பத்தியா லுள்ளே பரிந்தரனைத் தாநோக்கில்
முத்திக்கு மூல மது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியு மாடியும் பல்காலும் நேசித்துத்
தேடுஞ் சிவநிந்தை யால்.

அன்பா லழுது மலறியு மாள்வானை
யென்புருகி யுள்ளே நினை.

பூசனைசெய்து புகழ்ந்து மனங்கூர்ந்து
நேத்தா லீசனைத் தேடு.

கண்ணு லுறப்பார்த்துக் காதலாற் றூனேக்கில்
உண்ணுமே யீச னொளி.

நல்லானைப் பூசித்து நாதனென வுருகில்
நில்லாதோ வீச னினை.

அடியார்க் கடியா யன்புருகித் தம்முன்
படியொன்றிப் பார்த்துக் கொளல்.

ஈசனெனக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீநினைந்து கொள்.

மெய்ம்மயிர் கூரவிதிர்ப்புற்று வேர்த்தெழுந்து
பொய்ம்மையி லீசனைப் போற்று.

செறிந்தறிந்து நாடிச் செவ்விதா யுள்ளே
அறிந்தரனை யாந்து கொளல்.

## திருவருட்பால்

### 1. அருள்பெறுதல்

அருளினு லன்றி யகத்தறி வில்லை
அருளின் மலமறுக்க லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளைக் கடிந்தின் றிறைவ னருளால்
தெருளுஞ் சிவசிந்தை யாம்

வாய்மையாற் பொய்யா மனத்தினால் மாசற்ற
தூய்மையா மீச னருள்.

ஒவ்வகத்து ணின்ற சிவனருள் பெற்றக்கால்
அவ்வகத்து ளானந்த மாம்.

உன்னுங் கரும முடிக்கலா மொள்ளிதாய்
மன்னு மருள் பெற்றக் கால்.

எல்லாப் பொருளு முடிக்கலா மீசன் றன்
தொல்லை யருள்பெற்றக் கால்.

சிந்தையு ணின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாச மறும்.

மாசற்ற கொள்கை மதிபோலத் தான்றோன்றும்
ஈசனருள் பெற்றக் கால்.

ஆவாவென் றோதி யருள்பெற்றார்க் கல்லாது
தாவாதோ ஞான வொளி.

ஓவாச் சிவனருள் பெற்றா லுறையின்றித்
தாவாத வின்பந் தரும்.

## 2. நினைப்புறுதல்

கருத்துறப் பார்த்துக் கலங்காமலுள்ளத்
திருத்திச் சிவனை நினை.

குண்டலியி னுள்ளே குறித்தரனைச் சிந்தித்து
மண்டலங்கள் மேலாகப் பார்.

ஓர்மின்கள் சிந்தையி லொன்றச் சிவன்றன்னைப்
பார்மின் பழம்பொருளே யாம்.



5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையி லீசனை
மிக்க மலத்தை விடு.

அறிமின்கள் சிந்தையி லாகாரத் தைச்சேர்ந்
துறுமின்க ளும்முளே யோர்ந்து.

நிற்றம் நினைந்திரங்கி நின்மலனை யொன்றுவிக்கில்
முற்று மவனொளியே யாம்.

ஓசை யுணர்ந்தங்கே யுணர்வைப் பெறும்பரிசால்
ஈசன் கருத்தா யிரு.

இராப்பக லன்றி யிருசுடர்ச் சிந்திக்கில்
பராபரத்தோ டொன்றலு மாம்.

மிக்க மனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுருவ மாம்.

வேண்டுவார் வேண்டும் வகைதான் விரிந்தெங்குங்
காண்டற் கரிதாஞ் சிவம்.

## 3. தெரிந்து தெளிதல்

தேறித் தெளிமின் சிவமென்றே யுள்ளுணர்வில்
கூறிய பல்குணமு மாம்.

உண்டில்லை யென்று முணர்வை யறிந்தக்கால்
கண்டில்லை யாகுஞ் சிவம்.

ஒருவர்க் கொருவனே யாகுமுயிர்க் கெல்லாம்
ஒருவனே பல்குணமு மாம்.

எல்லார்க்கு மொன்றே சிவமாமென் றுணர்ந்த
பல்லோர்க்கு முண்டோ பவம்.

ஆயு மிரவியு மொன்றே யனைத்துயிர்க்கும்
ஆயுங்கா லொன்றே சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவாத தொன்றே பலவா முயிர்க்கெல்லாந்
தேவான தென்றே தெளி.

தம்மை யறியாதார் தாமறிவோ மென்பதென்
செம்மையா லீசன் றிறம்.

எல்லா வுலகத் திருந்தாலு மேத்துவர்கள்
நல்லுலக நாத னடி.

உலகத்திற் பட்ட வுயிர்க்கெல்லா மீசன்
நிலவுபோ னிற்கும் நிறைந்து.

உலகத்தில் மன்னு முயிர்க்கெல்லா மீசன்
அலகிறந்த வாதி யாம்.

## 4. கலைஞானம்

சத்தியாஞ் சந்திரனை செங்கதிரோ னுடுருவில்
முத்திக்கு மூல மது.

அயனங்கொள் சந்திரனு லாதித்த னென்றில்
நயனமா முத்திக்கு வீடு.

அஞ்சாலு மாயா தறம்பொரு ளின்பமுந்
துஞ்சா தவர்துறக்கு மாறு.

ஈசனே டொன்றி லிசையாய பொருளில்லை
தேச விளக்கொளியே யாம்.

தாஞ்செய் வினையெல்லாந் தம்மையற வுணரில்
காஞ்சனமே யாகுங் கருத்து.

கூடகமான குறியெழுத்தைத் தானறியில்
வீடக மாகும் விரைந்து.

வீடகமாக விழைந்தொல்லை வேண்டுமேல்
கூடகத்திற் சோதியோ டொன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரித்து நின்ற சிவனைப் புணரவே
பாரித்த தாகுங் கருத்து.

இரேசக மாற்றி யிடையறா தேறிற்கில்
பூரிப்ப துள்ளே சிவம்.

சிந்தையில் நின்ற நிலைவிசும்பிற் சாக்கிரமாம்
சந்திரனிற் றோன்று முணர்வு.

## 5. உருவொன்றிநிற்றல்

எள்ளகத் தெண்ணெ யிருந்ததனை யொக்குமே
உள்ளகத் தீச னொளி.

பாலின்க ணெய்போற் பரந்தெங்கு நிற்குமே
நூலின்க ணீச னுழைந்து.

கரும்பினிற் கட்டியுங் காய்பாலி னெய்யும்
இரும்புண்ட நீரு மியல்பு.

பழத்தி னிரதம்போற் பரந்தெங்கு நிற்கும்
வழுத்தினு லீச னிலை.

தனுவொடு தோன்றுமே தானெல்லா மாகி
யணுவதுவாய் நிற்கு மது.

வித்து முளைபோல் விரிந்தெங்கு நிற்குமே
ஒத்துளே நிற்கு முணர்வு.

அச்சமாங் கார மகத்தடக்கி னற்பின்னை
நிச்சயமா மீச னிலை.

மோட்டினீர் நாற்ற முளைமுட்டை போலுமே
வீட்டுளே நிற்கு மியல்பு.

நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனாய் நிற்கும்
அனைத்துயிர்க்குந் தானு மவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையி னுள்ளே யுதிக்கின்ற தொன்டுறுண்
வாசமலர் நாற்றம் போல் வந்து.

## 6. முத்திகாண்டம்

மனத்தோ டுறுபுத்தி யாங்காரஞ் சித்தம்
அனைத்தினு மில்லை யது.

வாக்குங் கருத்து மயங்குஞ் சமயங்கள்
ஆக்கிய நூலினு மில்.

உருவமொன் றில்லை யுணர்வில்லை யோதும்
அருவமுந் தானதுவே யாம்.

தனக்கோ ருருவில்லை தானெங்கு மாகி
மனத்தகமாய் நிற்கு மது.

பெண்ணு ணலியென்னும் பேரொன் றிலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு.

அனைத்துருவ மாய வறியவை யகலில்
தினைத்துணையு மில்லை சிவம்.

துணிமுகத்துக் காதியாத் துன்னறி வின்றி
அணிதா ரிரண்டு விரல்.

மயிர்முனையிற் பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டங் காதி நிலை.

தற்பர மான சதாசிவத்தோ டொன்றில்
உற்றறி வில்லை யுயிர்க்கு.

உறக்க முணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. உருபாதீதம்

கருவின்றி வீடாங் கருத்துற வேண்டில்
உருவின்றி நிற்கு முணர்வு.

பிறத்தலொன் றின்றிப் பிறவாமை வேண்டில்
அறுத்துருவ மாற்றி யிரு.

உருவங்க ளெல்லா மறுத்தற மாற்றில்
கருவேது மில்லை தனக்கு.

கறுப்பு வெளுப்பு சிவப்புறு பொன்பச்சை
யறுத்துருவ மாற்றி யிரு.

அனைத்துருவ மெல்லா மறக்கெடுத்து நின்றால்
பிணைப்பிறப் பில்லையாம் வீடு.

நினைப்பு மறப்பற்று நிராகரித்து நின்றால்
தனக்கொன்று மில்லை பிறப்பு.

குறித்துருவ மெல்லாங் குறைவின்றி மாற்றில்
மறித்துப் பிறப்பிலை வீடு.

பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு.

பிறப்பறுக்க வீடாம் பேருவமை யின்றி
அறத்துருவ மாற்றி யிரு.

ஓசை யுணர்வோ டுயிர்ப்பின்மை யற்றக்கால்
பேசரும் வேண்டா பிறப்பு.

## 8. பிறப்பறுதல்

தன்னை யறியு மறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பிலை வீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்பாவ மாயு மறிவுதனைக் கண்டால்
பிறந்துழல வேண்டா பெயர்ந்து.

சிவனுருவந் தானாய்ச் செறிந்தடங்கி நிற்கில்
பவநாச மாகும் பரிந்து.

உறக்க முணர்வோ டுயிர்ப்பின்மை யற்றால்
பிறப்பின்றி வீடாம் பரம்.

நினைப்பு மறப்பு நெடும்பசியு மற்றால்
அனைத்துலகும் வீடா மது.

உடம்பிரண்டுங் கெட்டா லுருபய னென்றுண்டு
திடம்படு மீசன் றிறம்.

தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு.

மருளன்றி மாசறுக்கின் மாதூ வெளியாய்
இருளின்றி நிற்கு மடம்.

விகாரங் கெடமாற்றி மெய்யுணர்வு கண்டால்
அகாரமாங் கண்டீ ரறிவு.

சிந்தை யகங்காரஞ் செறிபுல னற்றக்கால்
முந்தியே யாகுமாம் வீடு.

## 9. தூயவொளிகாண்டல்

தோன்றிய தெல்லாந் தொடக்கறுத்துத் தூய்வெளி
தோன்றியக்காற் றூய வொளி. [யாய்த்

தெளிவாய தேச விளக்கொளியைக் காணில்
வெளியாய வீடதுவே யாம்.

மின்போ லுருவ விளக்கொளிபோல் மேற்காணில்
முன்போல மூலம் புகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிங்கு வலம்புரி பானிறத்த தாகில்
துளங்கொளியாந் தூய நெறி.

சங்கு நிறம்போற் றவள வொளிகாணில்
அங்கையி னெல்லியே யாம்.

துளங்கிய தூண்டா விளக்கொளி காணில்
விளங்கிய வீடாம் விரைந்து.

மின்மினி போன்ற விளக்காகத் தான்றோன்றில்
அன்னப் பறவையே யாம்.

உள்ளொளி தோன்றி லுணரி லருளொளி
அவ்வொளி யாதி யொளி.

பரந்த விசும்பிற் பரந்த வொளிகாணில்
பரம்பரமே யாய வொளி.

ஆதி யொளியாகி யாள்வானுந் தானுகி
ஆதி யவனுருவ மாம்.

## 10. சதாசிவம்

பத்துத் திசையும் பரந்த கடலுலகும்
ஒத்தெங்கும் நிற்குஞ் சிவம்.

விண்ணிறைந்து நின்று விளங்குஞ் சுடரொளிபோல்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.

ஆகமுஞ் சீவனு மாசையுந் தானுகி
ஏகமாய் நிற்குஞ் சிவம்.

வாயுவாய் மன்னுயிராய் மற்றவற்றி னுட்பொரு
ஆயுமிடந் தானே சிவம். [ளாய்

எண்ணிறைந்த யோனி பலவாய்ப் பரந்தெங்கும்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றேதா னூழி முதலாகிப் பல்லுயிர்க்கும்
ஒன்றாகி நிற்குஞ் சிவம்.

மூலமொன் றாகி முடிவொன்றா யெவ்வுயிர்க்குங்
காலமாய் நிற்குஞ் சிவம்.

மண்ணிற் பிறந்த வுயிர்க்கெல்லாந் தானாகி
விண்ணகமே யாகுஞ் சிவம்.

தோற்றமது வீடாகித் தொல்லைமுத லொன்றாகி
ஏத்தவரு மீச னுளன்.

நிற்கும் பொருளும் நடப்பனவுந் தானாகி
உற்றெங்கும் நிற்குஞ் சிவம்.

## தன்பால்

### 1. குருவழி

தன்பா லறியுந் தவமுடையார் நெஞ்சகத்துள்
அன்பா யிருக்கு மரன்.

சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித் திருக்குஞ் சிவம்.

குருவி னடிபணிந்து கூடுவ தல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம்.

தலைப்பட்ட சற்குருவின் சன்னிதியி லல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்.

நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிறிவற் றிருக்குஞ் சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லையில் லாத சிவம்.

நினைப்பு மறப்பு மில்லா தவர்நெஞ்சந்
தனைப்பிரி யாது சிவம்.

ஒன்றிலொன்றாத மனமுடை யாருடல்
என்று மொன்றாது சிவம்.

நாட்டமில் லாவிடம் நாட்ட மறிந்தபின்
மீட்டு விடாது சிவம்.

பஞ்சமா சத்த மறுப்பவர்க் கல்லாஅல்
அஞ்ச லென்னாது சிவம்.

## 2. அங்கியிற்பஞ்சு

அங்கியிற் பஞ்சுபோ லாகாயத் தேநினையில்
சங்கிக்க வேண்டா சிவம்.

மெய்ப்பா லறியாத மூடர்த நெஞ்சத்தின்
அப்பால தாகுஞ் சிவம்.

நெஞ்சகத்து ணோக்கி நினைப்பவர்க் கல்லாஅல்
அஞ்ச லென்னாது சிவம்.

பற்றிலா தொன்றினைப் பற்றினா லல்லது
கற்றதனா லென்ன பயன்.

தம்மை யறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
தம்மை யறிவரோ தான்.

அசபையறிந் துள்ளே யழலெழ நோக்கில்
இசையாது மண்ணிற் பிறப்பு.

இமையாத நாட்டத் திருந்துணர் வாருக்
கமையாத வானந்தமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு.

மதிபோ னுடம்பினை மாசற நோக்கில்
விதிபோ யகல விடும்.

சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர் தம்
பாவநசிக்கும் பரிந்து.

## 3. மெய்யகம்

மெய்யகத்தி னுள்ளே விளங்குஞ் சுடர்நோக்கில்
கையகத்தி னெல்லிக் கனி.

கரையற்ற செல்வத்தைக் காணுங்கா லத்தில்
உரையற் றிருப்ப துணர்வு.

உண்டுபசி தீர்ந்தாற் போலுடம் பெல்லாஅங்
கண்டுகொள் காதல் மிகும்.

உரைசெயு மோசை யுரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன்.

தோன்றாத தூயவெளி தோன்றியக்கா லுன்னைத்
தோன்றுமற் காப்ப தறிவு.

வாக்கு மனமு மிறந்த பொருள்காணில்
ஆக்கைக் கழிவில்லை யாம்.

கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்
உன்னகத்தே நின்ற வொளி.

ஆனந்த மான வருளை யறிந்தபின்
தானந்த மாகு மவர்க்கு.

மறவாமற் காணும் வகையுணர் வார்க்
கிறவா திருக்கலு மாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிறைந்து நின்ற பொருளே யுடம்பதன்
உண்ணிறைந்து நின்ற வொளி.

## 4. கண்ணாடி

கண்ணாடி தன்னி லொளிபோ லுடம்பதனுள்
உண்ணாடி நின்ற வொளி.

அஞ்சி புலனின் வழியறிந்தாற் பின்னைத்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு.

கண்டத் தளவிற் கடிய வொளிகாணில்
அண்டத்த ராகு முடம்பு.

சந்திரனுள்ளே தழலுற நோக்கினல்
அந்தர மாகு முடம்பு.

ஆர்க்குந் தெரியா வுருவந் தனைநோக்கில்
பார்க்கும் பரமா மவன்.

வண்ண மில்லாத வடிவை யறிந்தபின்
விண்ணவ ராகு முடம்பு.

நெற்றிக்கு நேரே நிறைந்த வொளிகாணில்
முற்று மழியா துடம்பு.

மாதூ வெளியின் மனமொன்ற வைத்தபின்
போதக மாகு முடம்பு.

சுத்தமோ டொன்றி மனமு மிறந்தக்கால்
முற்று மழியா துடம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. சூனியகாலமறிதல்

நிரவி யழ லுருவாய் நீண்ட வெளிகாணில்
அரவணையா னுரு முடம்பு.

உருவந் தழலாக வுள்ளத்தே சென்று
புருவத் திடையிருந்து பார்.

புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு முடம்பு.

அகம்புறம் பேராப் பொருளை யறியில்
உகம்பல காட்டு முடம்பு.

ஆவியாழ் போகா தடக்கி யிருந்தபின்
ஓவிய மாகு முடம்பு.

அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

தீயாக வுள்ளே தெளிவிற நோக்கினல்
மாயாது பின்னை யுடம்பு.

தானந்த மின்றித் தழலுற நோக்கிடில்
ஆனந்த மாகு முடம்பு

ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில்
அழிவின்றி நிற்கு முடம்பு.

பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்
முற்று மழியா துடம்பு.

## 6. சிவயோகநிலை

அடிமிசை வாயு வடுத்தடுத் தேகி
முடிமிசை யோடி முயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாடி வாயு வதனை யுடனிரப்பி
விண்ணோடு மெல்ல விடு.

மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்
கொள்ளுமின் கும்பங் குறித்து.

இரேசக முப்பத் திரண்டது மாத்திரை
பூரகம் பத்தாறு புகும்.

கும்பக நாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான்.

முன்ன மிரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

ஈரைந் தெழுபத்தீ ராயிர நாடியுஞ்
சேருமின் வாயுச் செயல்.

வாச லிரைந்து மயங்கிய வாயுவை
யீசன்றன் வாசலி லேற்று.

தயாவினில் வாயு வலத்தி லியங்கில்
தியான சமாதிகள் செய்.

ஆதியா மூல மறிந்தஞ் செழுத்தினைப்
பேதியா தோது பினே.

## 7. ஞானநிலை

தற்புருட மாமுகந் தன்னிற் றனியிருந்
துற்பன மஞ்சை யுரை.

தற்புருட மாமுகமேற் றாரகைதன் மேலே
நிற்பது பேரொளி நில்.

ஓதிய தற்புரு டத்தடி யொவ்வவே
பேதியா தோது பினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்துறு வன்னி கொழுநுற வொவ்வில்
எழுந்தா ரகையா மிது.

மறித்துக் கொளுமிடு வன்னி நடுவே
குறித்துக் கொளுஞ்சீயைக் கூட்டு.

காலுந் தலையு மறிந்து கலந்திடிக்
சாலவும் நல்லது தான்.

பொன்னொடு வெள்ளி யிரண்டும் பொருந்திடில்
அன்னவன் ருளதுவே யாம்.

நின்ற வெழுத்துட னில்லா வெழுத்தினை
யொன்றுவிக்கி லொன்றே யுள.

பேசா வெழுத்துடன் பேசு மெழுத்துறில்
ஆசான் பரனந்தி யாப்.

அழியா வுயிரை யவனுடன் வைக்கில்
பழியா தொன்றில்லை பார்.

## 8. ஞானம் பிரியாமை

பிறந்திட மாலிடம் பேரா திருப்பின்
இறந்திடம் வன்னி யிடம்,

சாவ திருந்த தலமே பவனமது
ஏகாந்த மசக விரு.

வெளியில் விளைந்த விளவின் கனிதான்
ஒளியி லொளியாக யுறும்.

மறவா நினையா மவுனங் திருக்கில்
பிறவா ரிறவார் பினை.

குருவாம் பரனந்தி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்கா திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரச் சோதி துலங்கு மிடமது
மந்திரச் சக்கரமு மாம்.

தூராதி தூரஞ் சொல்லத் தொலையாது
பராப் பராபரம் பார்.

ஈரொளி யீதென் றிறைவ னுரைத்தனன்
நீரொளி மீது நிலை.

அந்தமு மாதியு மில்லா வரும்பொருள்
சுந்தர ஞானச் சுடர்.

இருமூத்தி சாதனமென் றேட்டில் வரைந்து
பதிவைத்த னன்குரு பார்.

## 9. மெய்ந்நெறி

செல்லல் நிகழல் வருகால மூன்றினையுஞ்
சொல்லு மவுனத் தொழில்.

பஞ்சிற் படுபொறி போலப் பரந்திருந்து
துஞ்சாது ஞானச் சுடர்.

இமைப்பிற் பரந்தங் கொடுங்கு மின்போல
நமக்குட் சிவன்செயல் நாடு.

குவித்து மனத்தைக் குவித்துள்ளே யோங்கில்
செவித்துப் பெறுவ தெவன்.

காலுந் தலையு மொன்றாகக் கலந்திடம்
நாலா நிலையென நாடு.

மூல நிலமிசை மூன்று நிலத்தினில்
ஆல மருந்துஞ் சிவம்.

எழுஞ்சுட ருச்சியின் மேன்மனம் வைக்கத்
தொழிலொன் றிலாத சுடர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைத்திட்ட வாசலின் மேன்மனம் வைத்துப்
படைத்தவன் தன்னையே பார்.

அறுபதொ டாறு வருட மிதனை
உறுதிய தாக வுணர்.

அட்டமா சித்தி யடையுமோ ராண்டினில்
இட்ட மிதனைத் தெளி.

## 10. துரியதரிசனம்

வன்னிய தெட்டு மதியம் பதினாறு
முன்னிய பன்னிரண்டு முள்.

சூரியன் வன்னியொன் றுகிடிற் சோமனும்
பாரு மினிது பயன்.

மதியொடு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவ னுமென்று காண்.

மதிக்குட் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல்.

தோற்றுங் கதிரவ னுண்மதி புக்கிடில்
சாற்று மமாவாசை தான்.

வன்னி கதிரவன் கூடிடி லத்தனை
பின்னிவை யாகு மெலாம்.

அமாவாசை பூரணை யாகு மவர்க்குச்
சமனு முயிருடம்பு தான்.

அண்டத்திலு மிந்த வாறென் றறிந்திடு
பிண்டத்திலு மதுவே பேசு.

ஏறு மதிய மிறங்கி லுறங்கிடும்
கூறுமப் பூரணை கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிக்கு மதியமுங் கண்டங் குறங்கில்
மதிக்கு மமாவாசை யாம்.

## 11. உயர்ஞான தரிசனம்

கொண்டிடு மண்டல மூன்றங்கி தன்னையிப்
பிண்டமு மூழி பிரியா.

வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
தள்ளுமின் கால சரம்.

செவ்வாய் சனிநா யிறுவல மாகவே
கொள்ளிலிவ் வாறிடரு மில்.

வளர்பொன் னிடம்பிறைந் தேய்வு வலமாம்
வளர்பிறை யென்றே மதி.

வலத்திற் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்து பேராது செயல்.

இயங்கும் பகல்வல மிராவிடம் வாயு
நயங்குறல் நாடிக்குட் டான்.

அரசறி யாம லவன்பே ருரைத்துத்
தரைதனை யாண்ட சமன்.

கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடச்
செல்லாத தென்ன செயல்.

திருவருட் பாலைத் தெரிந்து தெளியில்
குருவிருப்பா மென்று கொள்.

கற்கிலுங் கேட்கலும் ஞானக் கருத்துற
நிற்கிற் பரமவை வீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வப்புலமை ஔவையாரருளிச் செய்த

# கல்வி ஒழுக்கம்

அஞ்சு வயதி லாதியை யோது.
ஆதியை ஓத அறிவுண் டாமே.
இனியது கொடுத்து எழுத்தைத் தானறி
ஈட்டிய நற்பொரு ளெழுத்தே யாகும்.
உடைமை யென்பது கல்வி யுடைமை
ஊமை யென்பவ ரோதா தவரே.
எழுதப் படுவ தெழுத்தே யாகும்
ஏழை யென்பவ ரெழுத்தறி யாதவர்
ஐயமேற்கினு மறிவ தெழுத்தே
ஒருபொழு தாயினு மோதி நன்கறி
ஓத லுடைமை வேத வித்தை
ஔவியம் பேசா ராமெழுத் தறிந்தோர்
கண்ணுடை யவர்கள் கற்றவர் தாமே
காவல ரெனினும் கணக்கை யோர்ந்தறி
கிடையா வுடைமை கல்வி யுடைமை
கீர்த்தியும் பெருமையுங் கிடைப்பது கல்வி
குறைவறக் கற்றவன் கோடியி லொருவன்
கூர்மை யென்பது குன்றாக் கல்வி
கெடுப்பினுங் கல்வி கேடு படாது
கேண்மை யுடைமை தாழ்விலாக் கல்வி
கைப்பொரு ளென்பது கசடறு கல்வி
கொற்றவன் றன்னிலும் கற்றவ னுயர்ந்தவன்
கோதறு கல்வி குவலயந் தருமே
சகல கலைக்குந் தலைமை யெழுத்தே
சாத்திரங் கற்றவன் றன்னை யறிந்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்தே
சீரிய தமிழைத் தெளிய வோது
சுற்ற மென்பது ஆசளறு கல்வி
சூக்குமுந் தூலமுந் தோன்றக் கற்றறி
சென்றிட மெல்லாம் சிறப்பே கல்வி
சேயன் என்பவன் தீங்கறக் கற்றவன்
சைகையுஞ் சமர்த்துந் தந்திடுங் கல்வி
சொல்லும் பொருளுந் தோன்றக் கற்றறி
சோம்ப ரென்பவர் சொல்லெழுத் தறியார்
தகுமெழுத் தறிந்தவன் தலைவ னாவன்
தான்கற் றவற்றைச் சபைதனி லோது
திருந்த வோதத் திறமுண் டாமே
தீரக் கற்றவன் தேசிக னாவன்
துறவோ ரென்பவர் துரிசறக் கற்றோர்
தூர்த்த ரென்பவர் சொல்லெழுத் தறியார்
தெளிய வோதத் திறமுண் டாமே
தேசமும் நாடும் திருந்த வோது
தைக்கக் கற்றவன் சமர்த்த னாவன்
தொன்னூல் முழுதுந் தோன்றக் கற்றறி
தோழ னாவது சோர்விலாக் கல்வி
நற்பொருள் கொடுத்து நன்று மோது
நானில முழுதும் நயந்தருங் கல்வி
நீசரித் தாயினுங் கற்பது நிலையே
நுண்பொருள் கொடுத்து நூல்பல வையுமறி
நூருண் டாயினுங் கல்வியை நோக்கு
நெடுங்கட லோடினும் நிலையே கல்வி
நேராக் கல்வி நிலையா காதே
நைய வருகினும் நொய்ய நன்கறி
நொந்தறி யாதவர் செந்தமிழ் கற்றோர்
நோகா தென்பவர் நுண்பொருள் அறிந்தோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகலை கற்றவர் பகையைக் கைவிடு
பாவலர் என்பவர் பழுதறக் கற்றோர்
பிழையறக் கற்றவர் பெரியவர் தாமே
பீடுஞ் செல்வமும் பெறத்தருங் கல்வி
புரையறக் கற்றவர் புவியரசன் பவரே
பூமியிற் செல்வம் புகழ்பெறுங் கல்வி
பெருமை பெறுவது பேசருங் கல்வி
பேதை யென்பவர் பெருநூ லறியார்
பையப் பையப் படித்தே யொழுகு
பொருள்மிகக் கொடுத்துப் போதக் கற்றறி
போதக் கற்றவன் புண்ணியஞ் செய்தவன்
மன்ன ராயினு மறைகளை யோது
மாசறக் கற்றவர் மாநில மாள்வார்
மிகப்பெருஞ் செல்வம் விளைத்திடுங் கல்வி
மீசுரக் கொடுத்து வித்தையைக் கற்றறி
முத்தமிழ் தனக்கு மூப்பு மில்லை
மூதறி வுயர்த்துந் தீதிலாக் கல்வி
மெல்லிய ரெனினும் வேண்டுவ தெழுத்தே
மேலோர் என்ன வித்தையைக் கற்றறி
மையறு கல்வியார் மாநில மாள்வார்
மொழிவ தகார முதலெழுத் தாமே
மோக விகாரர் முன்னால் பாரார்
வஞ்சக மோதார் நெஞ்சுறக் கற்றோர்
வாட்டந் தராது மறவாக் கல்வி
வித்தைகல் லாதவர் வெறியர் ஆவர்
வீரியம் பேசார் வித்தை யறிந்தோர்
வெண்பா முதலாய் விளங்க வோது
வையக மெல்லாம் வாழ்த்தவே யோது
வௌவிப் படிக்க வாழ்வுண் டாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்

திருமதி சி. அன்னம்மா

அவர்களின்

33-வது சிராத்ததின ஞாபகார்த்தமாக

(சித்திரை மாத பூர்வபக்ஷ பஞ்சமி)

5-5-95 இல்

டாக்டர் சு. சி. அருளானந்தம்

'வேதவனம்'

பசுபதியார் வீதி, சங்கத்தானை,

சாவகச்சேரி.

அவர்களால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org